# முத்து நபியின் புகழ் பாடுவோம் பாக்கியங்கள் பல பெறுவோம்

எல்லா புகழும் மகிமையும் இறைவனுக்கே உரித்தாகட்டும். ஸலவாத்தும், ஸலாமும் உத்தம நபி, எமது உயிரிலும் மேலான கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், பெருமானாரை உயிருக்கு உயிராக நேசித்த உற்ற தோழர்கள் மீதும், ஏனைய நல்லடியார்கள் மீதும் உரித்தாகட்டும்.

நமது முன்னோர்கள் ரபீஉல் அவ்வல் மாதம் வந்து விட்டால் தங்களது வீடுகளையும், பள்ளிவாயல்களையும், வீதிகளையும் மின் குமிழ்கள் மூலம் அலங்கரித்து வீதிகளில் பச்சைக் கொடிகளை ஏற்றி நமது உயிரிலும் மேலான கண்மணி நாயகத்தின் புகழ்மாலைகளை பாடி பலவிதமான விருந்தோம்பல்களை செய்து பெருமானாரின் மீதுள்ள அன்பை வெளிப்படுத்தி வாழ்ந்தார்கள். ஆகையால்தான் அக்காலங்கள் அருளும் பரகத்தும் நிறைந்தவையாகக் காணப்பட்டன. ஆலத்தின் அருட்கொடையான அண்ணலாரை கண்ணியப்படுத்தி வாழ்ந்ததால் அம்மக்கள் இறைவனின் அன்பையும் அருளையும் பெற்று பலாய் முஸீபத்துகளிலிருந்து பாதுகாக்கப்பட்டு வாழ்ந்து வந்துள்ளனர்.

ஆனால் இன்று முன்னோர்கள் காட்டித்தந்த சுன்னத்தான வழிமுறைகளில் குறைகண்டு அவற்றை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக்கொண்ட துர்பாக்கிய சமூகமாக எமது சமூகம் காணப்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். அதனாலோ என்னவோ இன்று முஸ்லிம் சமூகம் பல்வேறு பலாய் முஸீபத்துக்களுக்கு ஆளாகிக்கொண்டும் கேள்விப்படாத நோய்நொம்பலங்களால் அவதியுற்றுக்கொண்டும் இருக்கின்றது என்று சொல்லத்தோணுகின்றது. ஆயினும் ஆங்காங்கே தரீக்கா வழி வந்தோர்கள், சுன்னது வல் ஜமாஅத்தை சார்ந்த மக்கள் இந்நாட்களில் நபிகளாரின் புகழ்மாலைகளைப் பாடியும் மீலாத் விழாக்களைக் கொண்டாடியும் வருகின்றனர்.

**பெருமானாரை புகழ்வதன் மூலம் இறைவனிடத்திலிருந்து கிடைக்கும் வெகுமதிகள்.**
ஆல்லாஹு தஆலா திருமறையின் பல இடங்களில் அவன் எமக்களித்திருக்கின்ற நிஃமத்துகளுக்கு நன்றி செலுத்துமாறும் அவற்றி எண்ணி சந்தோசமடையுமாறும் ஏவிக்கொண்டிருக்கின்றான்.

قُلْ بِفَضْلِ اللَّهِ وَبِرَحْمَتِهِ فَبِذَٰلِكَ فَلْيَفْرَحُوا

"நபியே நீங்கள் கூறுங்கள் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய பேருபகாரங்களையும் ரஹ்மத்துக்களையும் கொண்டு அவர்கள் சந்தோசமடைந்துகொள்ளட்டும்". (அல் குர்ஆன் 10: 58) எனக் குறிப்பிடுகிறான்.

அல்லாஹ் எமக்கு வழங்கியிருக்கின்ற நிஃமதுக்களும் பாக்கியங்களும் மட்டற்றவை, எண்ணிலடங்காதவை. ஆயினும் அவற்றில் அவன் குறிப்பிட்டுக்கூறும் அருட்கொடைகளுள் பிரதானமான பாக்கியமாக நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எமக்கு நபியாக அனுப்பியதையே குறிப்பிடுகிறான்.

ஆலத்தின் அருட்கொடையான கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பற்றி இறைவன் திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான்.

لَقَدْ مَنَّ اللَّهُ عَلَى الْمُؤْمِنِينَ إِذْ بَعَثَ فِيهِمْ رَسُولًا مِّنْ أَنفُسِهِمْ

“அல்லாஹ் தஆலா முஃமின்களுக்கு அவர்களிருந்து ஒரு நபியை அனுப்பி அவர்களுக்கு நிச்சயமாக பேருபகாரம் செய்திருக்கிறான்”. (அல் குர்ஆன் 3:164)

وَمَا أَرْسَلْنَاكَ إِلا رَحْمَةً لِّلْعَالَمِينَ

“நபியே நாயகமே இவ்வாலத்தாருக்கு அருட்கொடையாகவே தவிர உங்களை நாம் அனுப்பவில்லை”. (அல் குர்ஆன் 21: 107)

மேற்படி திருமறை வசனங்கள் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கும் பேருபகாரங்களுக்கும் நன்றிசெலுத்துமாறும் அவற்றை எண்ணி சந்தோசமடையுமாறும் ஏவிக்கொண்டிருக்க அல்குர்ஆன் பிரஸ்தாபிக்கும் இப்பாரின் பரிபூரண அருள்ஜோதி கோமான் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வர்ணித்து புகழ்பாடி மகிழ்ந்திட முஃமின்களாகிய நாம் பின்னிற்கலாகுமோ?.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்து பாடிய ஹஸ்ஸான் பின் தாபித் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மஸ்ஜித் நபவியிலேயே ஒரு மிம்பரை அமைத்துக்கொடுத்தது மாத்திரமன்றி அவர்களுக்கு பின்வருமாறு துஆச்செய்தார்கள். “அல்லாஹ் தஆலா உங்களை ரூஹுல் குதுஸ் என்று சொல்லப்படக்கூடிய வானவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கொண்டு உறுதிப்படுத்தவானாக”. (புஹாரி) இது ஒரு சாதாரணமானதொரு அந்தஸ்துக்குரிய துஆ அல்ல. இறைவன் நபிமார்கள் ஸாலிஹீன்களுக்கு வழங்குகின்ற மகத்தான பாக்கியங்களில் ஒன்றாகும். இதனை நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விடயத்தில் இறங்கிய பின்வரும் திருவசனம் தெளிவுபடுத்துகிறது.

ولقد آتينا عيسى بن مريم البينات وأيدناه بروح القدس

“நாம் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தெளிவான அத்தாட்சிகளை வழங்கி அவர்களை ரூஹுல் குதுஸைக் கொண்டு பலப்படுத்தினோம்”. (அல் குர்ஆன் 2:87)

இவ்வாறு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்வது அல்குர்ஆன் சுன்னா காட்டித்தந்த சுன்னத்தான வழிமுறையாகும். நபிகளாரைப் புகழ்வதற்கு காலம் நேரம் தேவையில் சதாவேளையும் அண்ணலாரைப் புகழ்ந்தகொண்டே இருக்கலாம். ஆயினும் சாந்தி நபி பாருலகம் வந்த வசந்த காலத்தில் அண்ணலாரை புகழுவதும் அவர்களின் சிறப்புகளை எடுத்தியம்புவதும் ஸஹாபாக்களும் பெரியார்களும் இமாம்களும் காட்டிந்தந்த வழிமுறையாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அபிதர்தா ரழியல்லாஹு அன்ஹு அவர்களும், ஆமிரில் அன்சாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வீட்டுக்கு அருகாமையில் நடந்து சென்றார்கள்.

அப்போது ஆமிரில் அன்சாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அவரது பிள்ளைகளுக்கும் குடும்பத்தாருக்கும் இன்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த நாள் எனக் கூறி, அண்ணலார் பிறந்த நாளில் நடந்த அற்புதங்களையும் அதிசயங்களையும் விபரித்துக்கொண்டிருந்தர்கள். இதனை செவியுற்ற கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆமிரில் அன்சாரி ரழியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு துஆ செய்துவிட்டு பின்வருமாறு கூறினார்கள் "ஆமிரே! அல்லாஹ் உங்களுக்கு ரஹ்மதுடைய வாசலை திறந்து விட்டான். மலாயிகாமார்கள் அனைவரும் உங்களுக்காக இஸ்திஃபார் செய்கின்றனர். மேலும். எவரொருவர், நீங்கள் செய்தது போன்று செய்கிறாரோ அவரும் நீங்கள் பெற்றுக்கொண்ட பாக்கியங்களைப் பெற்றுக்கொள்வார்" எனக் கூறினார்கள். (ஜவாஹிருல் பிஹார் 2: 523)

மேலும் இமாம் சுயூதி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் 'அல்வாஸாயில் பீ ஷரஹி ஷமாயில்' என்ற நுலில் யார் ஒருவர் தனது வீட்டிலோ அல்லது பள்ளிவாயலிலோ அல்லது ஒரு கூடாரத்தினை உருவாக்கி அந்த இடத்தில் பெருமானாரின் புகழ்மாலையைப பாடுகிறாரோ அந்த இடத்தை அல்லாஹ்வின் அமரர்கள் சூழ்ந்து கொள்கின்றனர். அல்லாஹ்வின் அருள்பார்வையும் அவர்களைச் சூழ்ந்து கொள்கின்றது. மேலும் ஒளியுடன் உலாவருகின்ற ஜிப்ரீல் (அலைஹிஸ் ஸலாம்), இஸ்ராபீல் (அலைஹிஸ் ஸலாம்), மீகாயில் (அலைஹிஸ் ஸலாம்), அய்னாயீல் (அலைஹிஸ் ஸலாம்), சாப்பூன் (அலைஹிஸ் ஸலாம்), ஹாப்பூன் (அலைஹிஸ் ஸலாம்), கர்பிய்யூன் (அலைஹிஸ் ஸலாம்) போன்ற மலாயிகாமார்கள் பெருமானாரின் புகழ்மாலையப் பாடுவதற்கு ஏற்பாடு செய்தவர்களுக்கு இறைவனிடத்தில் பிழை பொறுக்கத் தேடுகின்றனர் எனக் கூறினார்கள்.

மேலும் இமாம் சுயூத்தி (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்கள் யாருடைய வீட்டில பெருமானாரின் புகழ்மாலை பாடப்படுகின்றதோ அவரது வீட்டில் பஞ்சம் ஏற்படாது. பெருவாரியாக பரவும் தொற்று நோய்களும் ஏற்படாது. பேரழிவுகள், திடீர் ஆபத்துக்கள், சோதனைகள் ஏற்படாது. மேலும் கோபம் கொள்வோரின் கோபத்திலிருந்தும், கண்ணூறு கொள்வோரின் கண்ணூறிலிருந்தும், பொறாமை கொள்வோரின் பொறாமையிலிருந்தும். கள்வர்களின் சூழ்ச்சியிலிருந்து அவரது குடும்பங்களும் உடமைகளும் பாதுகாக்கப்படுகின்றன. அவர்கள் மரணித்து விட்டால் முன்கர், நகீர் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கேள்விகளை அவர்களுக்கு இறைவன் இலகுபடுத்துகின்றான். அவர்கள் உண்மையாக மிக்க சக்தி வாய்ந்த இறைவனிடத்தில் சுவனபதியில் இருப்பார்கள் எனக் கூறினார்.

மேலும் வஹ்ஹாபிச சிந்தனையாளரான இப்னு தைமிய்யா என்பவர் கூட தனது 'இக்திலாவுஸ் சிராதல் முஸ்தகீம்' என்ற நுலில் 296 ஆம் பக்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். பெருமானாரை கண்ணியப்படுத்தும் நோக்கில் பெருமானார் பிறந்த தினத்தில் யார் அவர்கள் மீது புகழ்மாலை பாடுகின்றாறோ அவர்களுக்கு இறைவனிடத்தில் மிகப்பெரிய கூலி உண்டு.

இவ்வாறு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்புவைத்து அவர்களைப் போற்றிப் புகழ்ந்து அவர்களது பிறந்த நாளைக் கண்ணியப்படுத்துவது ஸஹாபாக்கள், நல்லடியார்கள், பெரியார்கள் வழி வந்த சுன்னத்தான வழிமுறையாகும். எனவே, நபிகளார் பிறந்த இந்த ரபீஉல் அவ்வல் மாதத்தில் தமது வீடுகளில் நபி (ஸல்) அவர்களின் புகழ்மாலைகளைப் பாடி நபியவர்களின் அன்பையும் அல்லாஹ்வின் அருளையும் பெறுவோமாக!

ஆமீன்.


ஆக்கம்
அல் ஹாபிழ் மௌலவி ***M.*** முஹம்மது நௌபி கௌஸி
***B.A. UPDN,***
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், ஏறாவூர்.
முன்னாள் ஹிப்ழ் பிரிவுப் பொறுப்பாளர்,
அல் ஜாமிஅதுல் கௌஸிய்யாஹ்.


